நவம்பர் 22, 2023

**வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்லுதல் மற்றும் வண்டிகளைக் கைப்பற்றி வைக்கும் தொழில் வகையில் ஒன்ட்டாரியோ மாகாணத்தின் புதிய மாற்றங்கள்**

பிராம்ப்டன், ON – ஜனவரி 1, 2024, தேதி முதல், பிராம்ப்டன் நகரில் வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்லுதல் மற்றும் கைப்பற்றி வைத்தல் தொழிலை பிராம்ப்டன் நகர நிர்வாகம் இனிமேற்கொண்டு மேலாண்மை செய்யாது. போக்குவரத்து அமைச்சகம் (MTO) இந்தப் பணியை தன் வசப்படுத்தி போக்குவரத்து அமைச்சகத்தின் (MTO) வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்லுதல் மற்றும் கைப்பற்றி வைத்தல் அமலாக்கச் சட்டத்தை(TSSEA) மாகாணம் முழுவதிலுமாக அமலாக்கம் செய்யும்.

இந்த TSSEA ஆனது, வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்லுதல் மற்றும் கைப்பற்றி வைத்தலுகு நகராட்சியின் முன்பிருந்த மேலாண்மையை நீக்கிவிட்டு மாகாண அளவிலான ஒரு கட்டமைப்பை நிலைநாட்டியுள்ளது.

**ஜனவரி 1, 2024 தேதி முதல் அமலாக்கமாகவிருப்பவை**

- ஆபரேட்டர்கள் மற்றும் வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்லும் ஓட்டுனர்கள் மாகாண ஆளுமைக்கு மட்டுமே இணக்கமாக இருக்க வேண்டியது.
- 2024 ஆம் ஆண்டின் ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு இடையிலான வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்லுதல் மற்றும் கைப்பற்றி வைத்தல் பற்றிய புகார்களை towing@ontario.ca க்கு மின்னஞ்சல் அனுப்பி ஒன்ட்டாரியோ மாகாணத்திடமே சமர்ப்பிக்கப்பட வேண்டும்

**என்னவெல்லாம் மாறுகின்றன**

**ஜனவரி 1, 2024:** வாடிக்கையாளரின் பாதுகாப்பு மற்றும் இந்தத் தொழிலை, தொழில்தகைமையாக்குவதற்கான இயல்தரம் கொண்ட பழக்கங்கள் உள்ளிட்ட புதிய மாகாணரீதியான TSSEA சட்டத் தேவைப்பாடுகள்.
TSSEA சட்ட அமலாக்கம் துவங்க இருப்பதால் வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்லும் ஓட்டுனர்கள் மற்றும் கைப்பற்றி வைத்தல் தொழில் புரியும் ஆப்ரேட்டர்கள் மாகாண அளவிலான ஒரு சான்றிதழ் கொண்டிருக்க வேண்டும்.

**ஜூலை 1, 2024:** வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்லும் வாகன ஓட்டுனர்கள், வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்வதற்கான மாகாண அளவிலான ஒரு சான்றிதழ் கொண்டிருக்க வேண்டும்.
இந்த TSSEA சட்டமானது, வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்லும் வாகன தொழில் புரிபவர்கள், அதன் ஓட்டுனர்கள் மற்றும் கைப்பற்றி வைத்தல் தொழில் புரியும் ஆபரேட்டர்கள் மாகாண அளவிலான ஒரு சான்றிதழ் கொண்டிருப்பதை அவசியமாக்குகிறது.

இந்த தொழில் வகையை ஊக்கப்படுத்துவதற்காக, ஜூலை1, 2024 தேதி வரை அனைத்துவகை சான்றிதழ்களுக்கும் கட்டணம் ஏதும் விதிக்கப்படமாட்டாது. வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்லும் வாகன ஓட்டுனர்கள் முன்னதாகவே விண்ணப்பிக்கும் பட்சத்தில் தேவையான பயிற்சியைப் பூர்த்தி செய்வதற்கு கூடுதலாக மூன்றாண்டு கால அவகாசம் கொண்டிருப்பார்கள் ( சான்றிதழ் பெற்ற பின்னர் அதனைப் புதுப்பிக்க பயிற்சியைப் பூர்த்தி செய்வது அவசியம்; அதற்காகவே இந்த மூன்றாண்டுகள் தேவைப்படுகின்றன).

ஜூலை 2024 முதல், சான்றிதழுக்கான பின்வரும் கட்டணங்கள் பொருந்தும்:

- வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்லும் வாகனத் தொழில் புரிதல் சான்றிதழுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் $575
- வாகனங்களைக் கட்டி இழுத்துச் செல்லும் வாகன ஓட்டுதல் சான்றிதழுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை $195
- வாகனங்களைக் கைப்பற்றி வைத்தல் தொழில் புரிதல் சான்றிதழுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் $575.

புகாரளிப்பது தொடர்பான நடைமுறை பற்றிய புதுத்தகவல்களுக்கான மேற்கொண்டு விபரங்களை மாகாண அரசாங்க மார்ச் மாதத்தில் வழங்குவார்கள். மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்: www.ontario.ca.

-30-

**ஊடகத் தொடர்பு**
பிராம்ப்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca